
# தமிழகத்தில் இஸ்லாம்

## வந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் வரலாறு

தொகுதி– 1



முனைவர் ஜெ.ராஜா முகமது

JMC

Scanned with CamScanner

# தமிழகத்தில் இஸ்லாம்

## வந்ததும் வளர்ந்ததும் வாழ்வதும்

## வரலாறு

(தொகுதி-I)

டாக்டர். **ஜெ. ராஜா முகமது**

B.Sc.,M.A(His), M.A (Arch), M.A (Anth), B.G.L, Ph.D.

இயக்குநர்,

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 020.

JMC

வெளியீடு

**ஜமால் முகமது கல்லூரி**

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

# 7, ரேஸ் கோர்ஸ் ரோடு, காஜா நகர்,

திருச்சிராப்பள்ளி - 620 020.

✆ 0431 - 2331135, 0431 - 2331235

Scanned with CamScanner

**தமிழகத்தில் இஸ்லாம் -**
**வந்ததும் வளர்ந்ததும் வாழ்வதும் - வரலாறு**

டாக்டர் ஜெ. ராஜா முகமது

© வெளியீட்டகத்திற்கு

முதல் பதிப்பு - 2018

இரண்டாம் பதிப்பு - 2020

வெளியீடு : ஜமால் முகமது கல்லூரி
இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு
ஆய்வு மையம்
# 7, ரேஸ் கோர்ஸ் ரோடு, காஜா நகர்,
திருச்சிராப்பள்ளி - 620 020.
✆ 0431 - 2331135, 0431 - 2331235

அச்சிட்டோர் : டீக்யூ பிரஸ்., திருச்சி - 20.

ISBN : 978-81-944322-4-1

விலை : ரூ. 75/-

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331035
0431 - 2331435
P.B.No. : 808

**JAMAL MOHAMED COLLEGE**
(Autonomous)
College with Potential for Excellence
Accredited ($3^{rd}$ Cycle) with 'A' Grade by NAAC
Since 1951
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

**Dr. A.K. காஜா நஜீமுதீன்**
செயலர் மற்றும் தாளாளர்



# வாழ்த்துரை

தென்னகத்தின் அலிகார் என்று மக்களிடம் அறிமுகமாகியுள்ள திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி, உயர்கல்வி பயிற்றுவிப்பதை மட்டும் கடமையாகக்கொள்ளாமல் மக்களின் வாழ்வியல் குறித்த பல்வேறு அம்சங்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டு வெளியிட்டு வருகிறது. இவ்வகையில் தமிழக முஸ்லிம் மக்களின் வரலாறு பண்பாடு குறித்த செய்திகளை உள்ளடக்கிய நூல்கள் இல்லாத குறையை, நிவர்த்தி செய்யும் பொருட்டு, “இஸ்லாமியப் பண்பாட்டு ஆய்வு மையம்” என்ற ஆய்வு இருக்கைத் தொடங்கப்பட்டது. மைய இயக்குநராக வரலாற்று ஆய்வாளர் முனைவர். ஜெ.ராஜாமுகமது பொறுப்பேற்றிருப்பது இதன் செயல்பாடுகள் துரிதமாக நடைபெறுவதற்கு வகையானது. முனைவர் ராஜாமுகமது “தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாறு” குறித்து எழுதியுள்ள ஆய்வு நூல், இந்த சமுதாயத்தின் தொன்மையான வரலாற்றினையும், முஸ்லிம் கடலோடிகள், தங்களது சொந்தக்கப்பல்களில் இந்தியக்கடல் வெளிகளில் பயணித்து உலகக்கடல் வாணிபத்தில் பங்கு கொண்ட பாங்கினை ஆவணங்களின் துணை கொண்டு விளக்கி, உலகப் பல்கலைக்கழகங்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளார். இது தமிழ் முஸ்லிம் சமுதாயத்திற்குப் பெருமை சேர்க்கிறது.

நமது மக்கள் தங்களது முன்னோர்களின் வரலாற்றினைப் பதிவுசெய்து வைப்பதில் கவனம் செலுத்தவில்லை. இதன் காரணமாக 1400 ஆண்டுகளுக்கு முன் இஸ்லாம் இந்த நாட்டிற்கு வந்து பரவிய வரலாறு குறித்து கர்ணப்பரம்பரைக் கதைகளே சொல்லப்பட்டு வருகின்றன. இந்திய இனங்களுக்கிடையே வேற்றுமையை உருப்பெருக்கும் சக்திகள், இதனைப் பயன்படுத்திக் கொண்டு தமிழகத்தில் “கட்டாயமாக இஸ்லாம் மதம் திணிக்கப்பட்டது” எனத் தொன்றுதொட்டு சொல்லுவதையும் எழுதப்படுவதையும் நாம் காண்கிறோம். இதை எதிர்கொள்ள இஸ்லாமிய எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் ஆங்காங்கே முயற்சிகள் மேற்கொண்டிருப்பினும், அவை பல திக்குகளுக்குச் சென்றடையாத நிலையே உள்ளது. இதனால் இந்த நாட்டின் சமரச வாழ்வு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

Scanned with CamScanner

"தமிழகத்தில் கத்தியின்றி ரத்தமின்றி இஸ்லாம் பரவியது" எப்படி என்பதை இந்த நூல் ஆய்வத்தரவுகளுடன் விளக்குகிறது. வட இந்தியாவில் முஸ்லிம்கள், ஆளும் சக்தியாக உருவெடுப்பதற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்பே வணிகநிமித்தம் வந்த அரேபிய முஸ்லிம்களின் மூலமாகத் தமிழகத்துக் கடற்கரைக்கு வந்து சேர்ந்த இஸ்லாம் மக்களின் மனங்களில் இடம் பெற்று வாழ்ந்து வருவதை நூலாசிரியர் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். படித்தவர், பாமரர், மாணவர்கள் என அனைவர் மத்தியிலும் இது ஒரு சரியான விளக்கத்தை அளிக்கும் நூலாகும்.

இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாம் மதம் திருச்சிராப்பள்ளி பகுதியில் அமைதியாகத் தடம்பதித்து ஹிஜ்ரி 116-ம் ஆண்டில் ஒரு பள்ளிவாசலும் கட்டப்பட்ட செய்தியினை ஆசிரியர் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார். இவ்வகையில் தமிழக முஸ்லிம்களின் தொன்மைக்குச் சான்று திருச்சியிலிருந்து தொடங்குகிறது என்பது வரலாறு எழுதுபவர்களுக்கு நல்ல செய்தியாகும். இஸ்லாம் சமயத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் இஸ்லாமிய மெய்ஞானியரின் பங்களிப்பு மகத்தானது. கடல் கடந்த நாடுகள் பலவற்றிலிருந்து இந்த நாட்டிற்கு வந்து, இஸ்லாமிய நல்லற போதனைகள் செய்து, ஆயிரக்கணக்கான மக்களை இஸ்லாம் மதத்தைத் தழுவச்செய்து , தங்கள் வாழ்நாளை இந்த மண்ணில் நிறைவுசெய்து இங்கேயே அடக்கமாகி இருக்கும் இவர்களது துயிலிடங்கள் தர்காக்கள் என அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் தமிழ்நாட்டிற்கு வந்து காலத்தால் முற்பட்ட ஞானியர் பெருமகனார் திருச்சியில் அடக்கமாகி இருக்கும் நத்ஹர் வலி என்னும் இறைநேசச் செல்வராவார். இவரது அழைப்புப் பணியாலும், அன்பான அணுகுமுறையாலும், இஸ்லாம் மதம் இப்பகுதியில் எப்படிப் பரவியது என்பது இந்த நூலில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. தவறானப்பிரச்சாரங்களுக்கு இவையே தக்கபதில் சொல்லும்.

"தமிழ்நாட்டில் இஸ்லாம் வளர்வதற்கு இந்த நாட்டை ஆண்டுவந்த இந்து சமய மன்னர்கள் அளித்து வந்த ஆதரவை, கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள் துணைகொண்டு இந்த நூலில் நீண்டதொரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போது நிலவிய சமுதாய சூழலில் இஸ்லாம் இங்கு வளர்ச்சிக் காண்பதற்குக் கிடைத்த நல்வாய்ப்புகளை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இளைய தலைமுறையினருக்கு இது எழுச்சியூட்டுவதாகும்.

ஆய்வு மையத்திலிருந்து க ஆக வெளிவரும் இந்த நூல் தவறாக ஊதிப்பெருக்கப்பட்டு பரந்து கொண்டிருக்கும் கட்டுக்கதை பலூன்களை உடைத்தெறியும் "**Bullet**", என்று சொல்லலாம்.

இந்த நல்ல பணியைச் செய்துள்ள முனைவர் ஜெ.ராஜாமுகமது அவர்களைப் பாராட்டுவதோடு, மேலும் பல ஆய்வு நூல்களை அவர் உருவாக்கித் தரவேண்டுமென்பது நமது விருப்பமாகும்.

**Dr. A.K. காஜா நஜீமுதீன்**
செயலர் மற்றும் தாளாளர்

Scanned with CamScanner

Tel. No.: 0431 - 2331135

Fax : 0431 - 2331035
0431 - 2331435
P.B.No. : 808

Since 1951

# JAMAL MOHAMED COLLEGE

(Autonomous)
College with Potential for Excellence
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu



ஹாஜி **M.J. ஜமால் முஹம்மது**
பொருளாளர்

## வாழ்த்துரை

எல்லாப்புகழும் இறைவனுக்கே

வரலாறு தெரியாத சமுதாயம் எழுச்சி பெறமுடியாது. எனவேதான் 1300 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிற்கு இஸ்லாம் எப்படி வந்தது என்பதும், எவ்வாறு பரவியது என்பதும் வரலாற்று ரீதியாக அறியப்படாத காரணத்தால் இஸ்லாம் சமயம் இங்கு வன்முறையில் பரப்பப்பட்டது என்றதொரு பொய்ப் பிரச்சாரத்தை மீண்டும் மீண்டும் பிரிவினை சக்திகள் சொல்லி வருகின்றன. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணவே திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி "இஸ்லாமியத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்" என்ற ஆய்வுத்துறையைத் தொடங்கியுள்ளது.

வரலாற்று ஆய்வுமையம் தொடங்கி 6 மாதமே ஆன நிலையிலும், இதன் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு இந்த நூல் வெளிவருகிறது. "தமிழகத்தில் இஸ்லாம் - வந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் - வரலாறு" என்ற இந்த நூல் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் எப்படிப் பரவியது என்பதை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. இஸ்லாம் தோன்றிய கி.பி. 7-ம் நூற்றாண்டிலேயே, தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் (இஸ்லாமிய அரசியல் சக்திகள் ஏதும் இல்லாத நிலையில்) அமைதியாக மக்கள் மனதில் இடம்பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய அரிய பணியைச் செய்தவர்கள் மக்களிடம் எளிதில் பழகும் வாய்ப்புப் பெற்றிருந்த அரேபிய முஸ்லிம் வணிகர்கள் மற்றும் அவர்களுக்குத் துணைநின்ற தன்னார்வ மதப்பிரச்சாரத் தொண்டர்கள் மற்றும் இஸ்லாமிய மெய்ஞானியர் ஆவார்கள் என்பதை நூலாசிரியர் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

இஸ்லாம் அன்றும் இன்றும் தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டிருப்பதற்கு, இதுபோன்ற சான்றுகளுடன் கூடிய நூல்கள் இல்லாததும் முக்கிய இடைவெளியாகும். இதன் காரணமாகத் தாக்கங்களும் விளைவுகளும் இந்த நாட்டு இனங்களுக்கு இடையே பிணக்கத்தை உண்டு பண்ணியுள்ளதும் நமது அமைதியான வாழவிற்குப் பங்கம் விளைவித்தும் வந்துள்ளது.

Scanned with CamScanner

தவறான கருத்துக்களுக்கு வரலாற்றுச் சான்றுகளுடன் இந்த நூல் சரியான விளக்கத்தினை அளிக்கிறது. இது கற்றவர்கள் மத்தியில், குறிப்பாக மாணவர்கள் மத்தியில் ஒரு தெளிவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வதற்கு இது வழிவகுக்கும்.

ஆய்வு மைய இயக்குநர் முனைவர் ஜெ.ராஜாமுகமது தமிழக முஸ்லிம்களின் வரலாறு குறித்து ஆய்வுகள் செய்து வருபவர். அவரது ஆழ்ந்த வரலாற்று அணுகுமுறை இந்த நூலில் பளிச்சிடுகிறது. ஆய்வு மையம் தமிழ் முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து மேலும் பல நூல்களை வெளியிடவுள்ளது. ஜமால் முகமது கல்லூரி, முஸ்லிம்களின் பண்பாட்டினை உலகறியச் செய்யும் இப்பணியினை மேற்கொண்டிருப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது. முனைவர் ஜெ.ராஜாமுகமது அவர்களுக்கு நமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆய்வுப்பணி தொடர எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக.

ஹாஜி **M.J. ஜமால் முஹம்மது**
பொருளாளர்

Scanned with CamScanner

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331035
0431 - 2331435
P.B.No. : 808

JAMAL MOHAMED COLLEGE
(Autonomous)
College with Potential for Excellence
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
Since 1951
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

முனைவர் **K. அப்துஸ் சமது**
துணைச் செயலாளர்



# வாழ்த்துரை

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் திருப்பெயரால்........

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி தனது சீரிய கல்விப்பணிகளோடு, பல்வேறு துறைகளிலும், ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது. தமிழக முஸ்லிம்களின் வரலாறு பண்பாடு குறித்து ஆய்வு செய்து ஆவணப்படுத்தும் பொருட்டு, "இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்" என்றதொரு ஆய்வு இருக்கை டிசம்பர் 2018ல் துவங்கப்பட்டது. வரலாற்று ஆய்வாளர் முனைவர் ஜெ.ராஜாமுகமது இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார். தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர், தமிழ்நாட்டு முஸ்லிம்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருபவர்.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய முதல் வெளியீடாக, "தமிழகத்தில் இஸ்லாம் - வந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் - வரலாறு" என்னும் இந்த ஆய்வுரை நூலாக வெளிவருகிறது. இந்த ஆய்வுரையில் தமிழ்நாட்டில் இஸ்லாம் சமயம் அமைதிவழியில் பரவியது என்பது தக்க சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தவறாகப் பரப்பப்பட்டுவரும் பல செய்திகள் மறுபரிசீலனைக்குட்படும். இளைய தலைமுறையினரின் சிந்தனையைத் தூண்டும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வரும் மத நல்லிணக்கம் உறுதிபெறும். எதிர்வரும் சமுதாயம் இணக்கத்துடன் வாழ வாய்ப்பாகும்.

இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையப்பணிகள் தொடருகின்றன. தொடர்ந்து ஆய்வு முடிவுகள் வெளியிடப்படும். இந்த நல்லதொரு பணியினை மேற்கொண்டு வரும் முனைவர். ஜெ.ராஜாமுகமது பாராட்டுக்குரியவர்.

K. Abdus Samad

முனைவர் **K. அப்துஸ் சமது**
துணைச் செயலாளர்

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331035
0431 - 2331435
P.B.No. : 808

Since 1951

# JAMAL MOHAMED COLLEGE

(Autonomous)
College with Potential for Excellence
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu



முனைவர் **S. இஸ்மாயில் முகைதீன்**
முதல்வர்

வாழ்த்துரை

புகழனைத்தும் ஏக இறைவனுக்கே.....

திருச்சி மாநகரில் 1951-ம் ஆண்டு, பின் தங்கிய சமுதாய இளைஞர்களின் வாழ்வில், குறிப்பாக முஸ்லிம்கள், ஏற்றம் காண ஜமால் முகமது கல்லூரி தொடங்கப்பட்டு இன்றைக்கு சுமார் 12,000 மாணவ-மாணவியரின் கல்வித் தேவையைப்பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. எதிர்காலத்தை ஆளப்போகும் இந்த இளைஞர் பட்டாளத்தை கல்வியறிவில் முன்னனியில் இருக்கச் செய்வதோடு இந்த நாட்டின் சரியான வரலாற்றினையும், பண்பாட்டு விழுமியங்களையும், மத நல்லிணக்கத்தையும் எடுத்துக்காட்ட வேண்டியதும் அவசியமாகிறது. இது இந்த இளைஞர்கள் மத்தியில் நேச உணர்வை வளர்க்கும். இதன்வழி இந்த நாடு அமைதியான முன்னேற்றம் காண வாய்ப்பாகும்.

"சரித்திரத்தேர்ச்சி கொள்", என்றான் பாரதி, ஆனால் சரித்திரத்தைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் தமிழக இஸ்லாமிய சமுதாயம் காலக்கிரமமான வரலாற்றுத்தரவுகளை ஆவணப்படுத்தி வைப்பதில் பின் தங்கி விட்டது. இதன் காரணமாக 1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட இஸ்லாம் சமுதாயத்தின் வரலாறு, முஸ்லிம்களின் வாழ்வியல் ஆகியனவற்றை இந்த நாட்டிற்கு வணிகர்களாக வந்து நாடாளுபவராக உருவான ஆங்கிலேயர் (The British) எழுதினர். நல்ல செயல்தான்! ஆனால் தங்களது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள இந்த நாட்டு இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு இந்நாட்டு வரலாறு திரித்து எழுதப்பட்டது. அவற்றில், இந்த நாட்டை 700 ஆண்டுகள் நடைபெற்ற முஸ்லிம்களின் ஆட்சி ஒரு கோர கனவாக சித்தரிக்கப்பட்டு, இந்த நாட்டுப் பெரும்பான்மை இந்துமக்களின் வரலாறு பண்பாட்டை அழித்தவர்களாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டன. பின்னர் வந்த எழுத்தாளர்களும், மக்களும் இந்த நாட்டின் வரலாற்றினை, "ஆங்கிலேயரின் கண் கொண்டு பார்க்கத் தொடங்கினர்" பகைமை தீ மூட்டப்பட்டது.

இவ்வாறு எழுதப்பட்ட வரலாற்று நூல்களில், இந்த நாட்டில் இஸ்லாம் மதம், வாள்கொண்டு பரப்பப்பட்டது எனவும், கட்டாயப்படுத்தி மதம் மக்களிடம் திணிக்கப்பட்டது எனவும், இந்துக்களின் கோவில்கள் அழிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டது எனவும் பலவாறாகப் பொய் மூட்டைகளை அவிழ்த்து

Scanned with CamScanner

விட்டனர். இவையெல்லாம் சரியா? தவறா? என்ற எண்ணப்போக்கு அப்போதைய சூழ்நிலையில் உருவாகாமல் போனது. இதனால் இந்த நாட்டில் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு பெரும் சவால்கள் தோன்றின.

இதற்கு இயன்றதொரு தீர்வுகாணும் தொடக்கமாக திருச்சி ஜமால் முகமது கல்லூரி இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்ற ஆய்வு இருக்கையைத் தொடங்கியுள்ளது. தமிழக முஸ்லிம்களின் வரலாற்றை, வரலாற்று வரைவியல் ரீதியாக எழுதி ஆவணப்படுத்துவது இதன் நோக்கம். நமது கவனத்திலிருந்து தப்பிப்போன இந்த நற்பணியை இப்போது ஜமால் முகமது கல்லூரி மேற்கொண்டதில் பெருமை அடைகிறோம். ஆய்வு மையம் தொடங்கி 6 மாதங்களே ஆனாலும் அதன் பணி மிகவும் வேகமாகச் சென்று கொண்டிருப்பதற்கு அடையாளமாக தமிழகத்தில் இஸ்லாம் எப்படிப் பரவியது? இதற்கான காரணிகள், சூழல்கள் குறித்து முதல் ஆய்வு நூல் வெளிவருகிறது. இது ஒரு தொடக்கமே. இன்னும் இது குறித்தும் நிறைய செய்திகள் சொல்லப்பட வேண்டியுள்ளது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் தொடங்கப்பட்ட போது இதற்கு பொறுப்பேற்க பொருத்தமான ஒருவர் எங்களுக்குக் கிடைத்தது இறையருள். முனைவர் ஜெ.ராஜா முகமது, தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத் துறையில் பணிபுரிந்தவர். சிறந்த ஆய்வுப்புலமை மிக்கவர். முஸ்லிம்களின் வரலாறு குறித்த இவரது ஆய்வுகள் உலக வரலாற்றாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இவரது தலைமையின் கீழ் எங்களது எண்ணக்கிடக்கை இனிதே நிறைவேறும் என்பதற்கு, "தமிழகத்தில் இஸ்லாம் - வந்ததும், வளர்ந்ததும், வாழ்வதும் - வரலாறு " என்னும் இந்த நூல் அமைகிறது.

தமிழகத்தில் இஸ்லாம் எப்படிப் பரவியது என்பதை மிக விரிவான வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்குகிறது இந்த நூல். சில முக்கிய செய்திகளை இங்கு முன்னிலைப்படுத்தி குறிப்பிடலாம். தமிழக முஸ்லிம்களின் தொன்மையான வரலாற்றிற்கு அறுதியான சான்று திருச்சியில் கிடைக்கிறது என்பதை நூலில் காணும்போது இந்த மண்ணின் சிறப்பு புலப்படுகிறது. இங்கு 1300 ஆண்டுகளுக்கு முன் நிலவிய சமய நல்லிணக்கம் நமக்கு வியப்பூட்டுகிறது.

"இஸ்லாம் இந்த நாட்டில் வாள்கொண்டு பரப்பப்பட்டது, கட்டாயமாக விடாப்பிடியாகப் பிடித்து வந்து சுன்னத் செய்தார்கள். ஏற்காதவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்" என்ற புனையுரைகளுக்குத் தக்க பதில் இங்கு கிடைக்கிறது. ஏனெனில் ஹிஜ்ரி 116 - கி.பி. 734-ல் முஸ்லிம் மன்னர்கள் யாரும் ஆட்சி செய்யவில்லை. இஸ்லாம் என்னும் இனிய மார்க்கம், மக்கள் மனங்களுக்குள் புகுந்து ஆன்மீக ரீதியாக, அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் வரலாறு இங்கு பேசப்படுகிறது. அப்போது ஆண்ட இந்து மன்னர்களின் ஆதரவு கடல் கடந்து வந்த இந்த மார்க்கத்திற்குக் கிடைத்ததை இது புலப்படுத்துகிறது என்பதை ஆசிரியர் ஆணித்தரமாக நிலைநிறுத்துகிறார்.

இஸ்லாம் மார்க்கத்தை - மதத்தை - இந்த நாட்டில் அறிமுகப்படுத்தியவர்கள் யார்? இந்த நாட்டிற்கு வணிகநிமித்தம் வந்த அரேபிய முஸ்லிம் வணிகர்கள். இவர்களுடன் பின்னர் தன்னார்வப் பிரச்சாரகர்களும், இஸ்லாமிய

Scanned with CamScanner

மெய்ஞானியர்களும் இணைந்து கொண்டனர். இவர்களது கூட்டு முயற்சியால் இஸ்லாம் இந்த நாட்டில் வளர்ந்தது. மக்களின் ஆதரவுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

வடஇந்தியாவிற்கும், தென்னிந்தியாவிற்கும் இஸ்லாம் வந்தவிதம் வெவ்வேறானது. முன்னது அரசியல் நோக்கம் கொண்டது. பின்னது அமைதியானது. இருப்பினும், இந்த நாட்டை 700 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்கள் இந்த நாட்டை ஓர் " இஸ்லாமிய நாடாக மாற்றும் முயற்சியில் ஈடுபடவில்லை". அப்படி அவர்கள் நினைத்திருந்தால் இந்தியா இன்று இஸ்லாமிய குடியரசாக இருந்திருக்கும் என்பதை வரலாற்று ரீதியான சான்றுகளுடன் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

இந்நாட்டில் இஸ்லாம் பரவுவதற்கு அன்றைய சமுதாய சூழல் சாதகமாக இருந்தது. சாதி ஏற்றத்தாழ்வுகளில் சிக்கித் தவித்த சமுதாய அடித்தள மக்கள் தங்கள் மனித உரிமைகளை உறுதி செய்து கொள்ள தாங்களாகவே முன்வந்து இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டார்கள். அப்போது நடந்து கொண்டிருந்த சமயங்களுக்கிடையேயான மோதல்களில் இஸ்லாம் தனித்திருந்தது. இஸ்லாமியக் கோட்பாடுகள் அப்போதிருந்த மதங்களின் கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருந்ததால், பிற மதங்கள் இஸ்லாம் மதம் பரவுவதற்குத் தடையாக இருக்கவில்லை. இஸ்லாத்திற்கு மத மாற்றங்கள் ஒரு சர்ச்சையாகவும் இருக்கவில்லை. இணக்கமாக மக்கள் மனதில் இடம்பெற்ற இஸ்லாம் எல்லா தரப்பு மக்களின் ஆதரவுடன் வளர்ந்து, வாழ்ந்து வருகிறது என்பதை கல்வெட்டுகள், இலக்கியம், தொன்மங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு ஆசிரியர் விளக்குவது, தமிழ்நாட்டில் இஸ்லாம் மதத்தின் தொன்மை வரலாற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இஸ்லாம் மதத்தைத் தழுவிய மக்களின் தொன்மங்கள் குறித்து இதுவரை சொல்லப்படாத செய்திகளை ஆசிரியர் திறம்பட விளக்கியுள்ளார். இவ்வகையில் மேலும் இதுகுறித்து செய்திகளையும் தேடிச்சேர்க்க வேண்டும். நல்லதொரு நூலை நமக்கு அளித்துள்ள முனைவர் ஜெ.ராஜாமுகமது அவர்களுக்கு பாராட்டுக்கள். தமிழக முஸ்லிம் சமுதாயம் இந்த நூலை வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. ஆய்வு மையத்தின் மூலம் தமிழக முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து மேலும் பல அரிய செய்திகள் தொடர்ந்து வெளிவர வேண்டுமென்பது நமது அவா.

இத்தகையதொரு நல்ல பணியினை மேற்கொள்ள ஊக்கமளித்து, கல்லூரியில் "இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்" தொடங்கி செயல்பட அனுமதியளித்த கல்லூரியின் நிர்வாகக்குழுவினருக்கு எனது நன்றி.

தமிழக முஸ்லிம்களின் பன்முக வளர்ச்சியில் ஜமால் முகமது கல்லூரி என்றும் முன்னனியில் இருக்கும். இன்ஷா அல்லாஹ்

முனைவர் **S. இஸ்மாயில் முகைதீன்**
முதல்வர்

Scanned with CamScanner

**INDIAN UNION MUSLIM LEAGUE**
इंडियन युनियन मुस्लिम लीग
انڈین یونین مسلم لیگ

Unity Is Strength
"एकता ही बल है"

QUAID-E-MILLATH MANZIL No. 36, Maraikayar Lebbai Street, Chennai - 600 001.
Ph : 044 - 2521 8786 Fax : 044 - 2521 7786
E mail : info@muslimleaguetn.com Website : www.indianunionmuslimleague.in

Prof. K.M.KADER MOHIDEEN, Ex.M.P.
National President



# வாழ்த்துரை

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இயங்கி வரும் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் இயக்குநர் முனைவர் ஜெ. ராஜா முகமது அவர்களின் ஆய்வு மையத்தின் முதல் நூலாக "தமிழகத்தில் இஸ்லாம் வந்ததும் வளர்ந்ததும் வாழ்வதும் வரலாறு (தொகுதி-I)" உருவாக்கப்பட்டிருக்கிறது.

முனைவர் ஜெ. ராஜா முகமது, எத்துணை நுண்மான் நுழைபுலம் மிக்கத் தேர்ந்த ஆய்வறிஞர் என்பதை இந்த வரலாற்று நூலின் ஒவ்வொரு வரியும் சாட்சியம் பகரிகிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்திற்கு இத்தகு மெத்தகு மெய்யறிஞரைத் தேர்வு செய்து நியமித்திருக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கு வாழ்த்துக் கூற வேண்டும்.

இஸ்லாமிய நெறி, நபிகள் நாயகம் முகம்மது (சல் - அம்) அவர்களின் காலத்திலேயே தமிழகத்திற்குள் நுழைந்து, மக்களின் இதயங்களை ஈர்த்துள்ளது என்று தொடங்கி, அரபி வணிகர்கள், ஆன்மீகச் செல்வர்கள் மூலம் தமிழகத்தில் இஸ்லாம் எவ்வாறு விரிவடைந்தது என்பதை விளக்கி, பின்னர் வட இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சியின்போது, தமிழகத்தில் எழுந்த முஸ்லீம் ஆட்சியாளர்களின் வரலாற்றை விவரித்து, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இஸ்லாம் எதிர்கொண்ட அறை கூவல்களும் அவற்றை இஸ்லாமிய நெறி எவ்வாறு தனது கட்டுக்குள் அடக்கி மிகைத்தது என்பதை வருணித்து, தமிழகத்தில் பல்வேறு பிரிவினர் இஸ்லாமை ஏற்றுப்போற்றிய சரித்திரத்தையும் எடுத்து விளக்கி சமீபத்தில் மீனாட்சிபுரம் 'தீனாட்சிபுரமானது' வரையிலும் தொகுத்துத் தந்திருக்கும் தமிழக முஸ்லீம்களின் வரலாற்றுப் பெட்டகம் இந்தப் பனுவல்.

தமிழகத்தில் இஸ்லாமின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றிய ஒரு முழுமையான நூலாகத் திகழ்கிறது இந்த ஆய்வு. இனி வருங்காலங்களில் பலப்பல ஆய்வுகள் தோன்றுவதற்கும், தொடர்வதற்கும் இந்த ஆய்வு நூல் தூண்டு சக்தியாக விளங்கும்.

Scanned with CamScanner

தமிழகத்தில் வலிமார்கள் எனப் போற்றப் பெறும் ஆன்மீகச் செல்வர்கள் மூலம் இஸ்லாமிய நெறி பரவிய வரலாற்றுக்கு மிக உன்னத இடமளித்துள்ளது, நூலாசிரியரின் ஆழ்ந்த ஞானத்தை வெளிப்படுத்துகிறது. "உள்ளத்தைப் புடமிட்டு, தூய்மைபடுத்தி, மாசற்ற உயர் பண்புகளை வளர்த்து அகத்தையும், புறத்தையும் பரிபக்குவப்படுத்தி இறைவனிடம் நெருக்கம் கொண்டவர்கள் சூஃபி மெய்ஞானியர்". "இந்த ஞானியரது தன்னலமற்ற போக்கு, ஆன்மீகப் பயணம், பாமர மக்களைப் பெரிதும் கவர்ந்தது. இவர்களது முயற்சியால் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் இணையலாயினர்". (பக் - 51) இத்தகைய ஞானியரின் பட்டியலில் 180 பேர்களைக் கணக்கிட்டிருக்கிறார். இவர்களில் ஒவ்வொருவர் பற்றியும் விரிந்த ஆய்வுரை மேற்கொள்ளும் காலம் நிச்சியம் கனிந்து வரும்.

தமிழகத்தை ஆட்சி செய்த இந்து சமுதாயத்தை ச் சார்ந்த அரசர்கள் இஸ்லாம் பற்றியும், முஸ்லீம்கள் பற்றியும், எவ்வளவு உயர்வாக மதித்துப் போற்றியுள்ளனர் என்பதற்கு நூலாசிரியர் கல்வெட்டுக்களையும், இலக்கியச் சான்றுகளையும் தந்திருப்பது, தமிழகம் என்றைக்கும் அமைதிப் பூங்கா - சமூக நல்லிணக்கத் தோட்டம் - சமயப்பொறைக்கோர் முன்மாதிரி என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

சுருங்கச் சொல்லுமிடத்து, இந்த ஆய்வு நூல், வரலாற்று நூலாகவும், வரலாற்றாசிரியர்களுக்கு வரலாறு போதிக்கும் பாட நூலாகவும், ஆராய்ச்சி நூலாகவும், ஆராய்ச்சியில் ஈடுபட்டோருக்கு வழிகாட்டும் நூலாகவும், ஆராய்ச்சியில் ஈடுபட எண்ணுவோருக்கு ஒளியூட்டி உற்சாகமூட்டும் உந்து சக்தியாகவும் திகழ்கிறது.

தமிழகத்தில் இஸ்லாம் பற்றிய வரலாறு, இனி ஜமால் முகமது கல்லூரி இஸ்லாமியப் பண்பாட்டு ஆய்வு மையத்திலிருந்து தொடங்கும்; தொடரும்; பாருலகமெங்கும் இந்த வரலாற்று ஆய்வு ஒளிவெள்ளம் பாயும்.

முனைவர் ராஜா முகமது, உண்மையில் வரலாற்று ஆய்விடம் 'ராஜா' என்று நிரூபித்திருக்கிறார். இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

(Prof. K. M. Kader Mohideen)

கே.எம். காதர் மொய்தீன், M.A., Ex. M.P.
தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்,
இந்தியா.

Scanned with CamScanner

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | - | 1 |
| 2. | தென்னிந்திய அரேபிய உறவு | - | 31 |
| 3. | இஸ்லாம் | - | 38 |
| 4. | உலகமெல்லாம் பரவிய சாந்தி மார்க்கம் | - | 49 |
| 5. | தமிழகத்தில் இஸ்லாம் | - | 57 |
| 6. | தமிழக அரசியலில் முஸ்லிம் மன்னர்கள் | - | 98 |
| 7. | 19-20ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் இஸ்லாம் | - | 119 |
| 8. | இந்து மன்னர்களின் நேசம் | - | 126 |
| 9. | பின்னுரை | - | 132 |
| 10 | பின் இணைப்பு | | |
| | 1. ஜிசியா என்றால் என்ன? | - | 137 |
| | 2. இஸ்லாமிய வாழ்வியல் தொடர்பான கல்வெட்டுகள் | - | 145 |
| | தமிழகத்தில் அறப்பயிர் வளர்த்த அருந்தவச் சீலர்கள் | - | 160 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | - | 170 |


Scanned with CamScanner